தமிழ் நாடு அரசு

சுருக்கம்

பொதுப்பணிகள் - வேலைவாய்ப்பகம் மூலம் நியமனம் - முன்னுரிமை வரிசை - தாயும் , தந்தையும் இழந்த வாரிசுதாரர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளித்தல் - திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை

அரசாணை நிலை எண்,
8,

நாள். 10. 1 .2000.

பிரமாதி, மார்கழி, 26,
திருவள்ளுவர் ஆண்டு, 2030,

படிக்கப்பட்டது:

1, அரசாணை நிலை எண்,188, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறைஇ நாள்,28.12.76,

2, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரது கடித எண்,பப1.51344.98, நாள்,24.12.98 மற்றும் கடித எண், பப1.188887.98 நாள்,10,5,99,

-----

ஆணை:

மேலே படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில் வேலைவாய்ப்பகம் மூலம் முன்னுரிமை அடிப்படையில் அரசுப் பணிகளில் நியமனம் பெறுவதற்கான முன்னுரிமைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது,

2, தாயையும் தந்தையையும் இழந்த வாரிசுதாரர்களுக்கு வரிசை அடிப்படை என்று இல்லாமல் முன்னுரிமை கொடுத்து அவர்களுக்குப் பணி கொடுப்பது குறித்து வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துளை இயக்குநர் மற்றும் சமூக நலத் துறையுடன் கலந்து பரிசீலிக்கப்பட்டது.

3, அரசு இப்பொருள் குறித்து தீவீர பரிசீலனை செய்து, தாயையும், தந்தையையும் இழந்த வாரிசுதாரர்களுக்கு வேலைவாய்ப்பகம் மூலம் பெறப்படும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் பொருட்டு முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்க முடிவெடுத்துள்ளது. அவ்வாறே, தாயையும், தந்தையையும் இழந்த வாரிசுதாரர்கள், தனியார் மற்றும் அரசால் நடத்தப்படும் அனாதை இல்லங்களில் தங்கி பயின்று வளர்ந்து வரும் நபர்களுக்கும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும்பொருட்டு, அவ்வில்லங்களிலிருந்து பெறப்படும் சான்றிதழ் அடிப்படையில், முன்னுரிமைப் பிரிவில் சேர்க்கலாம் எனவும், மேலும், அங்கீகரிக்கப்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் சேரமுடியாத கிராமப்புற நபர்கள் தங்கள் உறவினர் வீட்டில் தங்கி, படித்துவிட்டு வேலை கேட்கும் ஆதரவற்ற நபர்கள் ஆகியோருக்கும் வேலை வாய்ப்பகம் மூலம் வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெற, வருவாய் வட்டாட்சியர் மூலம் பெறப்படும் 'தாய் தந்தையற்றோர்' சான்றிதழின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது. அதற்கேற்ப, அரசாணை நிலை எண்,188, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள். 28.12.76-ல் உள்ள முன்னுரிமை பெறுவோர் பட்டியலில் கீழ்க்கண்ட திருத்தம் வெளியிடப்படுகிறது:-

திருத்தம்

அரசாணை நிலை எண்.188, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்.28.12.76-ன் இணைப்பில் உள்ள பட்டியலில், தொகுப்பு மிமிமி-ல் , உட்பிரிவு (வீவீவீ)-ல், தற்போது இடம் பெற்றுள்ள "தமிழ்நாடு அரசின் கீழ் வரும் விழிப்புப் பணி நிறுவனம் மற்றும் சீர்திருத்தப் பள்ளிகளிலுள்ள இல்லவாசிகள் மற்றும் முன்னாள் இல்லவாசிகள்" என்ற இனத்திற்கு பின் கீழ்க்கண்ட இனம் சேர்க்கப்படுகிறது :-

"(iii) (a). தாயையும் தந்தையையும் இழந்த வாரிசுதாரர்கள்
(Heirs (Son/Daughter) who have lost both father and mother)".

விளக்கம் :

தணியார் மற்றும் அரசால் நடத்தப்படும் அனாதை இல்லங்களில் தங்கி பயின்று வளர்ந்து வரும், தாயையும் தந்தையையும் இழந்த வாரிசுதாரர்கள், அவ்வில்லங்களிலிருந்து பெறப்படும் சான்றிதழின் அடிப்படையிலும், அங்கீகரிக்கப்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் சேரமுடியாத கிராமப்புற தாய், தந்தையற்ற நபர்கள், வருவாய் வட்டாட்சியர் மூலம் பெறப்படும் சான்றிதழ் அடிப்படையிலும், முன்னுரிமை பெற தகுதியுடையவராவார்கள்,

( ஆளுநரின் ஆணைப்படி)

ஷீலா பாலகிருஷ்ணன்
அரசு செயலர்

பெறுநர்

அனைத்து அரசுச் செயலர்கள், சென்னை-9.
அனைத்து துறைத் தலைமை அலுவலர்கள் (மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நீதிபதிகள் ),
செயலர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-9,
இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை-5.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை-104.
தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம், சென்னை-104.
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.
இயக்குநர், சமூக நலத் துறை, சேப்பாக்கம், சென்னை-5.

நகல்:-

அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையிலுள்ள அனைத்துப் பிரிவகள், சென்னை-9.

/ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்